இந்துசமய அறநிலையத்துறை

# யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் 2016–17

தேக்கம்பட்டி – மேட்டுப்பாளையம்

மின்னஞ்சல் : elephantcamp@tnhrce.org

நாள் 04.03.2017

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் அருகிலுள்ள பவானி ஆற்றுப்படுகையில் நடைபெற்று வரும் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமில் நடைபயிற்சி மேற்கொண்ட யானைகள் பூவாளி குளியல் மேடையில் ஆனந்தமாய் நீராடி காலை உணவு மற்றும் சத்து மாத்திரைகள்உண்டு தமது இடங்களுக்கு சென்று ஓய்வெடுக்கத் துவங்கின. தென்னை மட்டை, சோளத்தட்டு, புல், கூந்தப்பனை உள்ளிட்ட பசுந்தீவனங்கள் வழங்கப்பட்டது. மாலையில் நடைபயிற்சி மேற்கொண்ட யானைகள் மாலை உணவருந்தி ஓய்வெடுக்கத் துவங்கின. முகாமில் பாகன்களுக்கான விளையாட்டுப்போட்டிகள் நடைபெற்று பரிசுகள் வழங்கப்பட்டது. கோவை வனக்கல்லூரியிலிருந்து சுமார் 30 மாணவ மாணவியர்கள் முகாமிற்குள் சுகாதாரப்பணிகள் மேற்கொண்டனர். தலைமைச்செயலகத்தில் பணிபுரிந்து வரும் அலுவலரால் முகாம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

